Sl. No. :

# EO3HR/17

பதிவு எண் | | | | | | | | | |

**2017**

# இந்து மதம் சைவமும் வைணவமும்

## (பட்டப்படிப்பு தரம்)

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

---

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.**
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளை குறித்து காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு அறைக் கண்காணிப்பாளரால் தரப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு விடை வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடை வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமைநிற மையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.
12. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEAL

SPACE FOR ROUGH WORK

1. ‘சித்’ என்பதன் பொருள்

(A) அழியாதது
(B) அறிவுடையது
(C) ஆனந்தமானது
(D) இன்பமானது

2. திருக்கோயில்களில் ‘பஸ்மோபசாரம்’ என்பது ———————— குறிக்கும்.

(A) தீபாராதனை
(B) அபிஷேகம்
(C) மாலை சாத்தல்
(D) நைவேத்தியம்

3. நாதமுனிகளின் சித்தாந்தம் ———————— என அழைக்கப்படுகிறது.

(A) அத்வைதம்
(B) துவைதம்
(C) நடைமுறை வேதாந்தம்
(D) விசிஷ்டாத்வைதம்

4. அறுபடை வீட்டில் திருவேரகம் அமைந்துள்ள இடம்

(A) பழனி
(B) திருச்செந்தூர்
(C) சுவாமி மலை
(D) திருத்தணி

5. ‘ஆனந்த தீர்த்தர்’ என்று அழைக்கப்படுபவர் யார்?

(A) சங்கரர்
(B) ம்த்துவர்
(C) இராமானுஜர்
(D) திருமூலர்

6. திருவருட்பயன் எனும் நூலை இயற்றியவர்

(A) அப்பர்
(B) சுந்தரர்
(C) அருணகிரிநாதர்
(D) உமாபதி சிவம்

7. முப்பொருள் தத்துவத்தை விளக்கும் ‘தாசு ஸ்லோகி’ என்ற நூலை எழுதியவர்

(A) நிம்பர்க்கர்
(B) இராமானுஜர்
(C) வல்லபாசாரியார்
(D) மத்வர்

8. ஆழ்வார்களின் பாடல்கள் —————— என அழைக்கப்படுகின்றன.

(A) சாத்திரங்கள்
(B) பாசுரங்கள்
(C) சூத்திரங்கள்
(D) பதிகங்கள்

9. வேத வரிசையில் கடைசியாக எழுந்த நூல்

(A) புராணங்கள்
(B) உபநிடதங்கள்
(C) இதிகாசங்கள்
(D) தர்ம சாத்திரங்கள்

10. அத்வைத தத்துவத்தை தோற்றுவித்த ஸ்ரீஆதிசங்கர் பிறந்த ஊரின் பெயர்

(A) கீழடி
(B) திருவனந்தபுரம்
(C) கடலாடி
(D) காலடி

11. ஆணவம் என்பது

(A) அசுத்தம், சிறுமை, அஞ்ஞானம்
(B) சுத்தம், பெருமை, இம்மை
(C) வறுமை, மகிமை, செழுமை
(D) துன்பம், இன்பம், பொறுமை

12. காரண பஞ்சாங்கத்தை நாம் அழைப்பது

(A) சிவம்
(B) சிவாய
(C) சக்தி
(D) சி

13. உயிர்களின் அண்டஜம் என்ற தோற்றம் என்றால் என்ன?

(A) வேர்வையில் தோன்றுவன. கிரிமி, பேன் முதலியன
(B) முட்டையில் தோன்றுவன. பறவை, ஊர்வன, நீர் வாழ்வன
(C) வித்து, வேர், கொடி, கொம்பு, கிழங்கு இவற்றில் தோன்றுவன. இவைகள் தாவரங்கள்
(D) கருப்பையில் தோன்றுவன. மனிதரும், விலங்குகளும்

14. உபநிடதக் கருத்தின்படி உலகத்தோடு கூடி, உலகமெங்கும் வியாபித்திருக்கும் நிலைக்கு என்ன பெயர்?

(A) சகுண பிரம்மம்
(B) நிர்குண பிரம்மம்
(C) நிஷ் பிரபஞ்சம்
(D) ச-பிரபஞ்சம்

15. ஐதீகத்தை நிருபணம் செய்யும் வரலாறு என்று போற்றபடுவது

(A) புராணங்கள்

(B) இதிகாசங்கள்

(C) சாத்திரங்கள்

(D) தோத்திரங்கள்

16. ஆண் விமானம் என சொல்லப்படுவது எந்த வகை?

(A) நாகரம்

(B) திராவிடம்

(C) வேசரம்

(D) இவை எதுவும் இல்லை

17. கோயிலின் உச்சியில் இருக்கும் கும்பத்தை எவ்வாறு அழைப்பர்?

(A) ஷோடசாந்தம்

(B) விராட்ஸ்வருபம்

(C) ஸ்தூலலிங்கம்

(D) பிரம்மந்திரம்

18. 'ஜீவன் முக்தி' என்றால் என்ன?

(A) உயிருள்ள போதே விடுதலை

(B) இறப்பிற்கு பின்பு விடுதலை

(C) பிறப்பிற்கு முன்பு விடுதலை

(D) அனைத்து உயிர் விடுதலை

19. 'வேதாந்தம்' என்ற சொல்லின் பொருள்

(A) வேதங்களின் இறுதிப் பகுதி

(B) வேதங்களின் முதற் பகுதி

(C) வேதங்களின் இடைப் பகுதி

(D) வேதங்களின் பொருள் பகுதி

20. சிவஞான போதத்தில் எத்தனை சூத்திரங்கள், அதிகரணம் உள்ளன?

(A) 12 சூத்திரங்கள் 39 அதிகரணம்

(B) 21 சூத்திரங்கள் 13 அதிகரணம்

(C) 49 சூத்திரங்கள் 16 அதிகரணம்

(D) 101 சூத்திரங்கள் 21 அதிகரணம்

21. 'கயிற்றினிடத்து பாம்பின் காட்சி தோன்றுதல்' - எவ்வகையான பிழையறிவு?

(A) கியாதி வாதம்

(B) அக்கியாதி வாதம்

(C) அநிர்வசனீய கியாதி வாதம்

(D) வியவகாரிக வாதம்

22. கீழ்க்கண்டவற்றில் எது பிரஸ்தானத்திரயுத்துள் ஒன்று என்று அழைக்கப் பெறுகிறது?

(A) வேதங்கள்
(B) உபநிடதங்கள்
(C) சைவ சித்தாந்தம்
(D) சமணம்

23. உபநிடதங்கள் சுட்டும் மூலப்பொருள் என்ன?

(A) மாயை
(B) ஆன்மா
(C) வீடு பேறு
(D) பிரம்மன்

24. இந்திய தத்துவத்தின் இரு பெரும் பிரிவுகள் யாவை?

(A) உபநிடத ஏற்பு - மறுப்பு கொள்கைகள்
(B) வேத ஏற்பு - மறுப்பு கொள்கைகள்
(C) கடவுள் ஏற்பு - மறுப்பு கொள்கைகள்
(D) ஆன்மா மறுப்பு - ஏற்பு கொள்கைகள்

25. கொடிமரத்தின் அடிப்பாகத்தை எவ்வாறு அழைப்பர்?

(A) பிரம்மபாகம்
(B) விஷ்ணுபாகம்
(C) உருந்திரபாகம்
(D) சிவபாகம்

26. பரமாத்மாவும் சீவாத்மாவும் ஒன்றே என்ற கருத்துடையவர்

(A) இராமனுசர்
(B) பரமஹம்சர்
(C) சங்கரர்
(D) புத்தர்

27. உலகு ஒரு மாயை என்றதன் கொள்கை இவ்வாறு அழைக்கப்படும்

(A) விவர்த்த வாதம்
(B) சூன்யவாதம்
(C) பரிணாம வாதம்
(D) அகஉண்மை வாதம்

28. இந்தியாவில் கர்மகாண்டம் ஞானகாண்டம் என்று எவற்றைப் பிரித்து அறிகிறார்கள்?

(A) வேதங்களை
(B) உபநிடதங்களை
(C) சைவ சித்தாந்தத்தை
(D) வேதாந்தத்தை

29. வேதம், ஆகமம், தோத்திரம், சாத்திரம், இதிகாசம் மற்றும் புராணம் ஆகிய இவை ———————— நூல்கள் ஆகும்

(A) சமண சமய

(B) பௌத்த சமய

(C) கிருத்துவ சமய

(D) இந்து சமய

30. பொருத்துக :

| பட்டியல் I | | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | இருக் வேதம் | 1. | மந்திரம் உச்சரிக்கும் முறை |
| (b) | யஜுர் வேதம் | 2. | துதித்தல் |
| (c) | ஸாம வேதம் | 3. | யாகம் |
| (d) | அதர்வண வேதம் | 4. | இன்னிசையால் பாடப்பெற்றது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 4 | 3 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

31. நாயன்மார்களின் இசையுடன் கூடிய பாடல்கள் ———————— என அழைக்கபடுகிறது.

(A) திருப்பதிகங்கள்

(B) கவிதைகள்

(C) பாசுரங்கள்

(D) பக்தி திரட்டு

32. ஆண்டவன் நமது உடம்பில் அகத்தும் புறத்தும் அமைத்துள்ள தத்துவங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(A) தொண்ணூற்றாறு

(B) என்பத்தாறு

(C) எழுபத்தாறு

(D) அறுபத்தாறு

33. ‘உயிரும், கடவுளும் வேறு வேறான பொருள்களே’ எனக் கூறியவர்

(A) மத்வாச்சாரியர் (B) சங்கரர்

(C) இராமானுஜர் (D) ரமணர்

34. நவராத்திரி விரதம் கீழ்காணும் தேவிகளைப் பூஜை செய்து வணங்கும் விரதமாகும்

I. துர்கா தேவி

II. லட்சுமி தேவி

III. சரஸ்வதி தேவி

(A) I ம் II ம் சரியானது (B) I ம் III ம் சரியானது

(C) II ம் III ம் சரியானது (D) I ம் II ம் மற்றும் III ம் சரியானது

35. கீழ்வருவனவற்றில் பொருந்தாதது எது?

(A) சங்கரர் – அத்வைதம்

(B) மத்துவாச்சாரியார் – விசிஷ்டாத்வைதம்

(C) விவேகானந்தர் – நடைமுறை வேதாந்தம்

(D) இராமானுஜர் – ஸ்ரீ பாஷ்யம்

36. இராமானுஜர் அருளிய தத்துவ முறை

(A) துவைதம் (B) அத்வைதம்

(C) விசிஷ்டாத்வைதம் (D) ஒருங்கிணைந்த யோகம்

37. கீழே கொடுக்கப்பட்டுள்ளதைப் பொருத்தி சரியான விடையை தேர்வு செய்யவும் :

(a) பாதங்கள் 1. கோபுரம்

(b) முழங்கால் 2. ஆஸ்தான மண்டபம்

(c) தொப்புள் 3. ஸ்நபன மண்டபம்

(d) மூக்கு 4. பலிபீடம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 4 | 3 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

38. ‘அஹிம்ஸா பரமோதர்ம’ என்பதின் பொருள்

(A) சிறுதெய்வ வழிபாடு

(B) அஹிம்ஸை என்பது ஒரு கடவுள் வழிபாடு மறுப்பு

(C) அஹிம்ஸையே மேலான அறம் ஆகும்

(D) பல தெய்வ வழிபாடு

39. இறைவனின் உறைவிடம்

(A) நமது உலகம்

(B) நமது கடல்

(C) நமது உயிர்

(D) நமது இல்லம்

40. ‘ஸ்ரீபாஷ்யம்’ என்பது

(A) வல்லபர் பிரம்ம சூத்திரத்திற்கு எழுதிய உரை

(B) சங்கரர் பிரம்ம சூத்திரத்திற்கு எழுதிய உரை

(C) மத்துவர் பிரம்ம சூத்திரத்திற்கு எழுதிய உரை

(D) இராமானுஜர் பிரம்ம சூத்திரத்திற்கு எழுதிய உரை

41. இராமானுஜர் —————— இதனை ஏற்கிறார்.

(A) புறப்பொருள் உண்மை

(B) தற்பொருள் உண்மை

(C) மறுவாழ்வு உண்மை

(D) ஆன்ம மறுப்பு உண்மை

42. “..... பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே” என கடவுளை தன் தந்தைக்குச் சுட்டிக் காட்டியவர்.

(A) திருஞான சம்பந்தர்

(B) மாணிக்க வாசகர்

(C) திருமூலர்

(D) சேக்கிழார்

43. கடவுள் என்பதன் பொருள்

(A) எல்லாவற்றையும் கடந்தவர்
(B) கடலை மட்டும் கடந்தவர்
(C) மலையை மட்டும் கடந்தவர்
(D) பாலைவனத்தை மட்டும் கடந்தவர்

44. ராமகிருஷ்ணமிஷின் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது

(A) 1895 (B) 1897
(C) 1890 (D) 1899

45. ''கருணையிலா ஆட்சி கடுகியொழிக
அருள் நயந்த நன்மார்க்கராள்க''
என்ற பாடல் வரி இடம்பெறும் இலக்கியம்

(A) திருஅருட்பா (B) தேவாரம்
(C) திருக்குறள் (D) திருவாய்மொழி

46. ''பத்துப்பிரபந்தம்'' பாடி அருளியவர் யார்?

(A) குமரகுரு (B) பாம்பன் சுவாமிகள்
(C) அருணகிரிநாதர் (D) கிருபானந்த வாரியார்

47. வாக்கியத்தை கவனித்து விடை காண், அத்வைத வேதாந்தத்தின் படி

I. பிரமம் என்ற ஒரு பொருளே உள்ளது
II. ஜீவர்கள் பிரமமே ஆவர்
III. காணப்படும் உலகம் பொய்த்தோற்றம்

(A) I மட்டும் சரி (B) I, II மட்டும் சரி
(C) I மற்றும் II சரி மேலும் III தவறு (D) I, II மற்றும் III சரி

48. சுத்தவித்தை என்ற சுத்தமாயையின் அதிபர் யார்?

(A) உருத்திரன் (B) சிவம்
(C) சக்தி (D) மகேசுவரன்

49. ‘சமயம்’ என்ற சொல்லின் பொருள் என்ன?

(A) சுட்டுதல்
(B) கற்பித்தல்
(C) கட்டுதல்
(D) கட்டவிழ்த்தல்

50. சீவனுக்கும் ஈசுவரனுக்குமிடையே உள்ள பேதம் எனப்படும்

(A) சீவசடபேதம்
(B) சீவேசுவரபேதம்
(C) சடபேதம்
(D) சீவபரஸ்பரபேதம்

51. மந்திரம் என்று பெயர் கொண்ட நூல் எது?

(A) திருமந்திரம்
(B) திருப்புகழூர் மந்திரம்
(C) சிதம்பர மந்திரம்
(D) கயிலாய மந்திரம்

52. இறை மூவடிவங்களில் போக வடிவத்தில் செயல்

(A) உயிர்கள் உலக இன்பத்தை நுகரச் செயல்
(B) உயிர்கள் தன்னை அறியச் செய்யும்
(C) உயிர்கள் பிற உயிர்களை அறியச் செய்யும்
(D) உயிர்கள் பிற கிரகங்களை அறியச் செய்யும்

53. ஆன்மா சத்தாகவும் அசத்தாகவும் மாறும் இயல்புடையது என்பதனை சைவசித்தாந்திகள் எங்ஙனம் குறிப்பிடுகின்றனர்?

(A) சகலர்
(B) சதசத்
(C) சியத் அசத்தி
(D) சியத் நாஸ்த்தி

54. ‘தாசமார்க்கம்’ என்றால் ———— எனப்படும்

(A) திருப்பணிகள் செய்தல்
(B) சமூகசேவை செய்தல்
(C) யோகம் வளர்த்தல்
(D) ஞானப் பணி செய்தல்

55. சைவசித்தாந்த நிலைப்படி கீழ்கண்டவற்றுள் மிக சரியான பொருத்தம் ஆகும்

(A) ஞானசம்மந்தர் – புத்திரமார்க்கம்
(B) நாவுக்கரசர் – புத்திரமார்க்கம்
(C) சுந்தரர் – புத்திரமார்க்கம்
(D) மாணிக்கவாசகர் – புத்திரமார்க்கம்

56. சைவத்தில் நால்வகை முக்திகள்

(A) பதி, பசு, பாசம், ஆணவம்

(B) சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்

(C) சாக்கிரம், சொப்பனம், துரியம், துரியாதீதம்

(D) கண்மம், மாயை, ஆணவம், பதி

57. சைவத்தில் கூறும் வினைகள் யாவை?

(A) மானதம், மந்தம், உரை

(B) சாமீபம், சாரூபம், சாலோகம்

(C) சஞ்சிதம், பிராத்தம், ஆகாமியம்

(D) குக்குமை, பைசந்தி, மந்திமை

58. நால்வகை முத்திகளில் சரியான இணை எது?

I. சாலோகம் – சிவனுலகம்

II. சாமீபம் – சிவனுருவாதல்

III. சாரூபம் – சிவமாதல்

IV. சாயுச்சியம் – சிவனண்மை

(A) I சரியானது

(B) II சரியானது அல்ல

(C) III சரியானது அல்ல

(D) IV சரியானது அல்ல

59. ஞானேந்திரங்களின் சரியான அறிவுப்பொறிகளின் இணை

I. காது – ஒலி அறிதல்

II. கண் – தொடு உணர்வு

III. மூக்கு – உருவத்தை அறிதல்

IV. தோல் – சுவை அறிதல்

(A) I சரியானது

(B) II சரியானது அல்ல

(C) III சரியானது அல்ல

(D) IV சரியானது அல்ல

60. சைவ சித்தாந்த நூல்களுள் சிவஞான போதத்திற்கு முந்தைய நூல்களில் ஒன்று எது?

(A) திருக்குறள்

(B) தொல்காப்பியம்

(C) ஞானாமிர்தம்

(D) சிலப்பதிகாரம்

61. திருவியலூர் உய்யவந்த தேவனார் எழுதிய நூலின் பெயர் என்ன?

(A) திருக்களிற்றுப்படியார்

(B) திருவுந்தியார்

(C) இருபா இருபது

(D) உண்மை விளக்கம்

62. எந்த அடியவரின் பாடல் இனிமையைக் கி.வா. ஜகந்நாதன் "கொஞ்சு தமிழ்" என்று கூறியுள்ளார்?

(A) சுந்தரர் (B) திருநாவுக்கரசர்

(C) திருஞான சம்பந்தர் (D) மாணிக்கவாசகர்

63. சரியான பொருத்தத்தினை தெறிவு செய் :

(A) மனவாசகம் கடந்தார் – உண்மை விளக்கம்

(B) உமாபதி சிவம் – திருவுந்தியார்

(C) அருணந்தி சிவாசாரியார் – கொடிக்கவி

(D) திருக்கடலூர் உய்யவந்த தேவநாயனார் – இருபா இருபது

64. பொருத்துக :

சிவஞானபோதம் சூத்திரம் மற்றும் அதன் பொருள்களும்

| | அ – சூத்திரம் | | ஆ – பொருள் |
|---|---|---|---|
| (a) | எட்டாம் சூத்திரம் | 1. | சிவபேறு |
| (b) | ஒன்பதாம் சூத்திரம் | 2. | பாசநீக்கம் |
| (c) | பத்தாம் சூத்திரம் | 3. | ஆன்மசுத்தி |
| (d) | பதினொன்றாம் சூத்திரம் | 4. | ஞானம் உணரும் முறை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

65. பதினான்கு சாத்திர நூல்களை அருளித்த சான்றோர்களின் எண்ணிக்கை

(A) மூவர் (B) அறுவர்

(C) எழுவர் (D) நால்வர்

66. சைவசித்தாந்திகள் கூறும் வினைகள்

(A) ஆணவம், கண்மம், மாயை

(B) பதி, பசு, பாசம்

(C) சஞ்சிதம், பிராப்தம், ஆகாமியம்

(D) பிராப்தம், ஆணவம், பாசம்

67. சைவத்தை ஏற்றவர்கள்

(A) ஆழ்வார்கள்
(B) புத்தர்கள்
(C) நாயன்மார்கள்
(D) சித்தர்கள்

68. சைவத்தில் இருவினையொப்பு என்ற நிலை —————— ஆல்.

(A) இறை விருப்பு நிலை
(B) விருப்பு வெறுப்பற்ற நிலை
(C) ஆன்மா சார்பு நிலை
(D) உலகு மறுப்பு நிலை

69. பழந்தமிழ் சமயம் எது?

(A) சாத்தம்
(B) அத்வைதம்
(C) சைவம்
(D) வைணவம்

70. சைவசித்தாந்தத்தின் உட்பொருளை விளக்கும் நிகழ்வு

(A) படிமக்கலை
(B) ஆனந்தத் தாண்டவம்
(C) ஜீவன் முக்தி
(D) பதி

71. பழந்தமிழர் கொள்கை மற்றும் உண்மையை உணர்த்தும் சிவ சித்தாந்த தமிழ் நூல்?

(A) வெண்பாக்கள்
(B) சிலப்பதிகாரம்
(C) சிவஞான போதம்
(D) கொடிக்கவி

72. திருத்தொண்டத் தொகையின் 4வது பாடலில் "பேயார்" என்று அழைக்கப்படுபவர் யார்?

(A) புனிதவதி அம்மையார்
(B) காரைக்கால் அம்மையார்
(C) ஔவையார்
(D) கண்ணகி

73. குமரிக்கண்டத்தில் இருந்த மகேந்திர மலையிலிருந்தே சிவபெருமான் ஆகமங்களை ஐம்முகங்களால் அருளினார் என்று —————— கூறுகிறது.

(A) திருவாசகம்
(B) திருவந்தாதி
(C) திருபல்லாண்டு
(D) திருப்பாவை

74. "அந்தக்கரணங்கள்" எவை?

(A) மனம், புத்தி, அகங்காரம், சித்தம்

(B) வாக்கு, சித்தம், புத்தி

(C) செயல், சொல், மனம்

(D) இறைவனிடம் ஜீவன் முக்தி அடைதல்

75. "பஞ்ச பூதங்கள்" எனப்பட்டவை

(A) கோமியம், தீ, சாம்பல், திருநீர், காற்று

(B) காற்று, தீ, சாம்பல், திருநீர், குங்குமம்

(C) வானம், காற்று, தீ, நீர், மண்

(D) காற்று, தீ, நீர், சாம்பல், வானம்

76. இறைவனுக்கு படையல் வைத்து வழிபடும் போது நுனிப்பகுதி எந்த பக்கம் இருக்க வேண்டும்?

(A) இறைவனுக்கு வலதுபுறம்

(B) இறைவனுக்கு இடப்புறம்

(C) இறைவனுக்கு எதிர்புறம்

(D) இறைவனுக்கு தெற்குபுறம்

77. நூற்றந்தாதியைப் பாடியவர்

(A) பொய்கையாழ்வார்

(B) இராமானுஜர்

(C) பூதத்தாழ்வார்

(D) பேயாழ்வார்

78. உபதேசரத்தினமாலை அருளியவர்

(A) மணவாளமாமுனிகள்

(B) பொய்கையாழ்வார்

(C) பூதத்தாழ்வார்

(D) பேயாழ்வார்

79. தம் பாடலை "சொல்மாலை" என அழைத்த ஆழ்வார்

(A) பொய்கையாழ்வார்

(B) பெரியாழ்வார்

(C) நம்மாழ்வார்

(D) திருமங்கையாழ்வார்

80. பன்னிரு ஆழ்வார்களில் முதலாழ்வார்கள் என அழைக்கப்படுபவர்கள்

(A) குலசேகர ஆழ்வார், திருப்பாணாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார்

(B) திருமங்கையாழ்வார், ஆண்டாள், பெரியாழ்வார்

(C) பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்

(D) மதுரகவியாழ்வார், நம்மாழ்வார், திருமழிசையாழ்வார்

81. குளத்தில் ஸ்நானம் செய்யச் சென்ற ஒருவன் தம் கைகள் கொண்ட மண்ணைக் கரையில் எடுத்துப் போடுவானேயானால், அந்த தருமம் காக்கும் தலைமுறைகள்

(A) பத்தொன்பது

(B) பதினொன்று

(C) இருபத்தொன்று

(D) பனிரெண்டு

82. ஒருவன் தனக்குப் பிறந்த பெண்ணைத் தகுந்த பாத்திரத்தில் தானம் செய்து கொடுப்பானேயானால், அந்த கன்னிகாதானம் காக்கும் தலைமுறைகள்

(A) 10 (B) 20

(C) 21 (D) 31

83. "பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரியவானுள் நிலாவுவாரே" எனக் கூறியவர்

(A) நம்மாழ்வார்

(B) பேயாழ்வார்

(C) பெரியாழ்வார்

(D) பூதத்தாழ்வார்

84. ஆழ்வார்களின் 'சப்த பிராமணங்களாக' கருதப்படுபவை எவை?

(A) தேவாரம்

(B) திவ்விய பிரபந்தங்கள்

(C) ஞான காண்டங்கள்

(D) கர்ம காண்டங்கள்

85. இராமானுசரின் காரண – காரிய கொள்கை யாது?

(A) விவர்த்தவாதம்

(B) பரிணாமவாதம்

(C) அசத்காரியவாதம்

(D) மாயைவாதம்

86. வைணவ பஞ்ச சம்ஸ்காரங்கள்

(A) யோகம், தாபம், ரூபம், தவம், அர்ச்சனம்

(B) தவம், தியாகம், மனனம், மந்திரம், அர்ச்சனம்

(C) தாபம், புண்ட்ரம், நாமம், மந்திரம், அர்ச்சனம்

(D) தவம், பக்தி, ஞானம், வீடுபேறு, இன்பம்

87. விசிஷ்டாத்வைதத்தின் ஆசிரியர் யார்?

(A) சங்கரர்

(B) இராமானுஜர்

(C) மத்துவர்

(D) நீலகண்ட சிவாசாரியார்

88. நம்மாழ்வாரின் திருவாய்மொழி வைணவ சமயத்தாரால் எவ்வாறு அழைக்கப் பெறுகிறது?

(A) பிரம்ம சூத்திரம்

(B) வேதாந்த சூத்திரம்

(C) ஸ்ரீபாஷ்யம்

(D) தமிழ் வேதம்

89. இராமானுஜர் யமுனாவிற்குக் கொடுத்த இரண்டாவது வாக்குறுதி யாது?

(A) ஸ்ரீரங்கத்திலிருந்து தப்பிச் செல்வது

(B) சோழ அரசரை எதிர்த்துப் போரிடுவது

(C) பிரம்ம சூத்திரத்திற்கு விளக்கவுரை எழுதுவது

(D) வைணவத்திலிருந்து சைவத்திற்கு மாறிவிடுவது

90. வைணவ சமய ஆகமங்களில் ஒன்று வைகாநஸம் மற்றொன்று யாது?

(A) பிரம்மவித்யா

(B) பாஞ்சராத்ரம்

(C) கீதபாஷ்யம்

(D) அப்ரதக்ஸித்தி

91. விஷ்ணுவை அறிந்து கொள்வதற்கான பிரமாணம் என்று வைணவம் எதைக் கருதுகிறது?

(A) பிரத்யக்ஷம்

(B) அனுமாணம்

(C) உபமானம்

(D) சப்தம்

92. ''செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால்

எத்தைத் தின்று எங்கே கிடக்கும்? என்ற மதுரகவி வினாவிற்கு நம்மாழ்வார் கூறிய விடை

(A) ''அருளை தின்று வைகுந்தம் செல்லும்''

(B) ''அத்தைத் தின்று அங்கே கிடக்கும்''

(C) ''எதையும் தின்று எங்கும் வாழும்''

(D) ''எதையும் தின்னா எங்கும் வாழா''

93. இராமானுஜரின் மனைவியின் இயற்பெயர்

(A) கோவிந்தம்மாள்

(B) தனம்மாள்

(C) தஞ்சமாம்பாள்

(D) பிச்சம்மாள்

94. திருக்கச்சிநம்பி இராமானுஜரை 'எதிராஜர்' என்று அழைத்ததின் பொருள்

(A) அமரர்க்கு அரசன்

(B) துறவிகளுக்கு அரசர்

(C) வேதாந்த ரத்தினம்

(D) புரட்சித்துறவி

95. பொருத்துக : வாதமும் அதற்கான உவமையும்

| அ – வாதம் | | | ஆ – உவமை |
|---|---|---|---|
| (a) | விஜாதீய பேதம் | 1. | குதிரைக்கும் எருதுக்குமுள்ள வித்தியாசம் |
| (b) | சஜாதீய பேதம் | 2. | குதிரையின் அதன் உறுப்புகளுக்கிடையேயான வித்தியாசம் |
| (c) | சுவகத பேதம் | 3. | ஒரு குதிரைக்கும் மற்றொரு குதிரைக்கும் உள்ள வித்தியாசம் |

| | (a) | (b) | (c) |
|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 |
| (B) | 3 | 2 | 1 |
| (C) | 1 | 2 | 3 |
| (D) | 1 | 3 | 2 |

96. "திருப்பாவை" —————— இவரால் பாடபட்டது.

(A) திருமழிசை ஆழ்வார் (B) பேயாழ்வார்

(C) ஆண்டாள் (D) நம்மாழ்வார்

97. "பொலிக பொலிக" இந்த வாக்கியத்தைக் கூறியவர்

(A) நம்மாழ்வார் (B) பேயாழ்வார்

(C) பூதத்தாழ்வார் (D) ஆண்டாள்

98. 'பிரபத்தி' என்பதன் விளக்கம்

(A) வணங்குதல் (B) வழிபடுதல்

(C) சரணாகதியடைதல் (D) யோகம் செய்தல்

99. 'பிரபத்தி' மார்க்கம் —————— சமய பிரிவுடன் தொடர்புடையது.

(A) சைவம் (B) புத்தம்

(C) ஜைனம் (D) வைணவம்

100. "நிஷ்காம கரும யோகம்" —————— இதனுடைய சாரமாகக் கருதப்படுகிறது.

(A) வேதங்கள் (B) உபநிடதங்கள்

(C) ஆகமங்கள் (D) பகவத்கீதை

101. மந்திரத்தின் வகைகள்

(A) நான்கு
(B) ஒன்று
(C) இரண்டு
(D) மூன்று

102. 'திருமந்திரத்தை' இயற்றியவர் ———————— ஆவார்.

(A) அப்பர்
(B) சுந்தரர்
(C) சம்பந்தர்
(D) திருமூலர்

103. சிவஞான போதத்தின் ஆசிரியர்

(A) அப்பர்
(B) சுந்தரர்
(C) சம்பந்தர்
(D) மெய்கண்டதேவர்

104. வேதம் என்பதற்கு ———————— என்பது பொருள்.

(A) அறிவு நூல்
(B) தெய்வ நூல்
(C) பழமையான நூல்
(D) வரலாற்று நூல்

105. மனிதனில் ஏற்கனவே அமைந்துள்ள பூரணத்துவத்தை வெளிகொண்டு வருவதற்கான முயற்சியே கல்வி என்று கூறியவர்

(A) ஸ்ரீ அரவிந்தர்
(B) ரவீந்தரநாத் தாகூர்
(C) டாக்டர் இராதாகிருஷ்ணன்
(D) விவேகானந்தர்

106. கடவுளின் ரூபம், அரூபம், ரூபாரூபம் எத்தனை?

(A) 8
(B) 9
(C) 7
(D) 6

107. 'பிரமந்திர மத்ய கபாலத்வாரம்' என கோயில்களில் எதனை கூறுவர்?

(A) கோபுரம்
(B) கொடி மரம்
(C) கர்ப்பக்கிரகம்
(D) பிரகாரங்கள்

108. பின்வருவனவற்றில் எது மந்திரமுறை அல்ல?

(A) மாயை

(B) வாசகம்

(C) மந்தம்

(D) ஜலம்

109. "நம" என்பதன் பொருள்

(A) பரதந்திரனே என்பதாகும்

(B) திறமையானவன் என்பதாகும்

(C) அழகானவன் என்பதாகும்

(D) உயரமானவ்ன் என்பதாகும்

110. கோயில் இருக்கும் விமானத்தின் கீழ்புறம் இருக்கும் கடவுள்

(A) முருகன்

(B) தட்சிணாமூர்த்தி

(C) விஷ்ணு

(D) விநாயகர்

111. வேதாந்திகள் கையாளும் 'அவச்சேதவாதம்' எனும் உவமையின் பொருள்

(A) பிரித்தல் அல்லது வெட்டுதல்

(B) காரணம் அறிதல்

(C) பொருள் மறுத்தல்

(D) பலியிடல்

112. 'பிரம்மசூத்திரம்' என்ற நூலுக்கு மற்றும் ஒரு பெயர்

(A) தர்ம சூத்திரம்

(B) கிரகய சூத்திரம்

(C) மனுதர்ம சூத்திரம்

(D) வேதாந்த சூத்திரம்

113. பிரமாணங்கள் என்றால் என்ன?

(A) அறங்களின் ஆதார வழிகள்

(B) அறிவு பெற ஆதார வழிகள்

(C) சமய ஆதார வழிகள்

(D) சட்ட ரீதியான ஆதார வழிகள்

114. "ஆக, ஒரேயொரு பொருள்தான் உண்மை, அது பிரம்மம்" இவற்றையேற்கும் தத்துவம்

(A) நியாயம்

(B) அத்வைதம்

(C) சைவ சித்தாந்தம்

(D) துவைதம்

115. உயிர்களின் பிறப்பு வகைகள் எத்தனை?

(A) ஆறு வகை
(B) ஏழு வகை
(C) எட்டு வகை
(D) ஒன்பது வகை

116. உபநிடதங்கள் எதன் அடிப்படையில் வேதாந்தம் என்று அழைக்கப் பெறுகிறது?

(A) வேள்விகளை விளக்குவதனால்
(B) இறைவனைப் பற்றி மட்டும் விளக்குவதால்
(C) வேதங்களின் இறுதிப் பகுதி என்பதால்
(D) உலகைப் பற்றி மட்டும் விளக்குவதால்

117. வேதங்கள் எவராலும் ஆக்கப்பட்டவை அல்ல என்பதைக் குறிக்கும் சொல் எது?

(A) அபௌருஷேயம்
(B) விவர்த்தவாதம்
(C) வேதாந்தம்
(D) பிரகிருதிவாதம்

118. வாமனாவதாரத்தில் இறைவனால் அழிக்கப்பட்ட அரக்கன் யார்?

(A) ஹயக்கிரீவன்
(B) மகாபலி சக்ரவர்த்தி
(C) ஹிரண்யாக்ஷன்
(D) ஹிரண்யகசிபு

119. இந்த வேதத்தை இசையுடன் பாடுவதால் பாவம் நீங்குகிறது?

(A) ரிக்
(B) யஜுர்
(C) சாமம்
(D) அதர்வணம்

120. ஆன்ம சுத்தி பற்றி கூறும் பாதம்

(A) சரியா பாதம்
(B) கிரியா பாதம்
(C) யோக பாதம்
(D) ஞான பாதம்

121. சநாதனதர்மம் என்று அழைக்கப்படும் மதம்

(A) உலகாயதம்
(B) ஜைனம்
(C) கிறித்தவம்
(D) இந்து மதம்

122. இராமானுசர் கூற்றுப்படி ஆன்மாவின் குணம்

(A) தர்மபூத ஞானம்

(B) அதர்மபூத ஞானம்

(C) சாத்வீக ஞானம்

(D) கர்ம ஞானம்

123. இறைவன், உயிர், உலகு ஆகிய மூன்றும் சேர்த்து ஒரு பொருள் - என்ற கொள்கை இவ்வாறு அழைக்கப்படும்

(A) பிரம்ம சித்தி

(B) ஆத்ம சித்தி

(C) லோக சித்தி

(D) அப்பிரதக் சித்தி

124. பாம்பன் சுவாமிகள் சிறப்பாக வழிபட்ட கடவுள் ஆவர்

(A) சிவபெருமான்

(B) முருகப்பெருமான்

(C) விஷ்ணு

(D) விநாயகர்

125. 'வேறுபாடுகள் நித்தயமானவை' என்ற கருத்தினை வலியுறுத்தியவர்

(A) விசிஷ்ட்டர்

(B) மத்துவர்

(C) வைசேடிகர்

(D) தாயுமானவர்

126. பட்டியல் I-ல் உள்ள அட்சரங்களுடன் பட்டியல் II-ல் உள்ள பயன்களுடன் பொருத்துக :

| | பட்டியல் I அட்சரங்கள் | | பட்டியல் II பயன் |
|---|---|---|---|
| (a) | நமசிவாய | 1. | அருள், சிவத்தோடு சேர்ந்து இன்பமளிக்கும் |
| (b) | சிவாய நம | 2. | பாசத்தைக் கெடுக்கும் |
| (c) | சிவாய சிவ | 3. | மலத்தை நாசம் பண்ணும் |
| (d) | சிவ | 4. | இம்மை மறுமைப் பயன் அளிக்கும் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

127. கோயில் அமைப்பு முறையில் லிங்கம் உள்ள இடம் மனித உடலின் எந்த பாகத்தை குறிக்கும்

(A) மார்பு
(B) கழுத்து
(C) புருவ மத்தி
(D) தலைஉச்சி

128. காட்சிக்கு புலனாகும் பொருள்கள் யாவை?

(A) நிலம், நீர், காற்று நெருப்பு
(B) மாயை, ஆன்மா, பிரம்பன், மறுஉலகு
(C) கிரியை, ஆன்மா, இறைவன், வீடுபேறு
(D) அறம், பொருள், இன்பம், வீடுபேறு

129. பொருத்துக :

(a) பெரிய புராணம் 1. ஒன்பதாம் திருமுறை
(b) திருவிசைப்பா 2. நான்காம் திருமுறை
(c) திருவிருத்தம் 3. எட்டாம் திருமுறை
(d) திருவாசகம் 4. பன்னிரெண்டாம் திருமுறை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 1 | 2 | 4 | 3 |

130. 'தென்முகக் கடவுள்' என அழைக்கப்படுபவர் —————— ஆவார்

(A) சண்டிகேஸ்வரர்
(B) தட்சிணாமூர்த்தி
(C) வினாயகர்
(D) முருகர்

131. திருஅருட்பிரகாச வள்ளலாரின் திருவருட்பாவில் எந்த திருமுறையில் 'அருட்பெருஞ்சோதி அகவல்' அமைந்துள்ளது

(A) ஆறாம் திருமுறையில்
(B) ஐந்தாம் திருமுறையில்
(C) முதல் திருமுறையில்
(D) மூன்றாம் திருமுறையில்

132. பொருத்துக : இறைவனது ஐந்து முகங்களிலிருந்து இருபத்தெட்டு ஆகமங்கள் தோன்றின.

| பட்டியல் I–முகம் | | பட்டியல் II–ஆகமம் |
|---|---|---|
| (a) சத்யோஜாத முகம் | 1. | விஜயம், நிச்வாசம், சுவாயம்புவம், அநலம், வீரம் |
| (b) வாமதேவ முகம் | 2. | ப்ரோத்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்ம், பாரமேச்வரம், கிரணம், வாதுளம் |
| (c) அகோர முகம் | 3. | தீப்தம், குஷ்மம், ஸஹஸ்ரம், அம்சுமான், சுப்ர பேதம் |
| (d) தத்புருஷ முகம் | 4. | காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம் ஆஜிதம் |
| (e) ஈசான முகம் | 5. | ரௌரவம், மகுடம், விமலம், சந்திர ஞானம், பிம்பம் |

| | (a) | (b) | (c) | (d) | (e) |
|---|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 | 5 |
| (B) | 5 | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 1 | 4 | 3 | 5 |
| (D) | 4 | 3 | 1 | 5 | 2 |

133. விஷ்ணு பிரபந்தம் எத்தனை?

(A) 24
(B) 18
(C) 4000
(D) 51

134. சிவாலயத்தில் எந்த கடவுளின் கவனத்தை ஈர்க்க கை தட்டுகிறோம்?

(A) தட்சிணாமூர்த்தி
(B) சண்டிகேசுவரர்
(C) பைரவர்
(D) முருகன்

135. சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறிய நாயன்மார்

(A) சுந்தரர்
(B) மாணிக்கவாசகர்
(C) திருநாவுக்கரசர்
(D) திருஞானசம்பந்தர்

136. 'வேதத்திற்கு திரும்புக' என்கிற கொள்கை முழக்கத்தை முழங்கிய இயக்கம்

(A) பிரம்ம சமாஜம்
(B) ஆரிய சமாஜம்
(C) பிரம்ம ஞான சபை
(D) ஆத்மீய சபை

137. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | சாஸ்தா மூலமந்திரம் | 1. | ஓம் உமா தேவ்யை நம: |
| (b) | சுப்பிரமணியர் மூலமந்திரம் | 2. | ஓம் கணபதயே நம: |
| (c) | கணபதி மூலமந்திரம் | 3. | ஓம் சரவண பவாய நம: |
| (d) | தேவி மூலமந்திரம் | 4. | ஓம் சாஸ்த்ரு மூர்த்தயே நம: |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 2 | 1 | 3 | 4 |

138. மகாசங்காரத்தில் பஞ்சபூதங்களையும் மாயையில் ஒடுக்குவது

(A) மனிதன்
(B) விலங்கு
(C) இறைவன்
(D) இயற்கை

139. எல்லா மந்திரங்களுக்கும் மூல மந்திரமாக இருப்பது

(A) சாஸ்தா மந்திரம்
(B) சிவன் மந்திரம்
(C) விஷ்ணு மந்திரம்
(D) பிரணவ மந்திரம்

140. இவர்களுள் 'ஏகான்ம வாதம்' பேசுவர் —————— ஆவர்.

(A) நிம்பார்கள்
(B) சங்கரர்
(C) இராமானுஜர்
(D) மத்துவர்

141. கடவுளின் ரூபாரூபமாக இருப்பது

(A) சிவம்
(B) சதாசிவம்
(C) சத்தி
(D) அயன்

142. பொருத்துக :

| | அ | | ஆ |
|---|---|---|---|
| (a) | சங்கரர் | 1. | விசிஷ்டாத்துவைதம் |
| (b) | இராமானுஜர் | 2. | துவைதாத்து வைதம் |
| (c) | மத்துவர் | 3. | கேவலாத்துவைதம் |
| (d) | நிம்பாக்கர் | 4. | துவைதம் |
| (e) | சைவசித்தாந்தம் | 5. | சுத்தாத்வைதம் |

| | (a) | (b) | (c) | (d) | (e) |
|---|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 | 5 |
| (B) | 3 | 1 | 4 | 2 | 5 |
| (C) | 5 | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 2 | 5 | 1 | 3 |

143. இப்பெரியோர்களை மேலிருந்து கீழாக காலவரிசைப்படி காண்க :

(A) கௌடபாதர், கோவிந்தர் மற்றும் சங்கரர்

(B) கோவிந்தர், கௌடபாதர் மற்றும் சங்கரர்

(C) சங்கரர், கோவிந்தர் மற்றும் கௌடபாதர்

(D) கோவிந்தர், சங்கரர் மற்றும் கௌடபாதர்

144. 1199 ஆம் ஆண்டு பிறந்த வேதாந்த ஆச்சாரியார்

(A) வல்லப ஆச்சாரியார்

(B) சங்கர ஆச்சாரியார்

(C) இராமானுஜ ஆச்சாரியார்

(D) மத்துவ ஆச்சாரியார்

145. 'சீவன் முக்தி' நிலையை ஏற்கும் தத்துவங்கள்

(A) பொருள் முதல் வாதம் மற்றும் ஆசீவகம்

(B) சமணம் மற்றும் பௌத்தம்

(C) சங்கரரின் அத்வைதம் மற்றும் சைவ சித்தாந்தம்

(D) துவைதம் மற்றும் விசிட்டாத்வைதம்

146. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்துக :

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | பிருதியின் கூறு | 1. | ஓடல், நடத்தல், இருத்தல், கிடத்தல், நிற்றல் |
| (b) | அப்புவின் கூறு | 2. | ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல் |
| (c) | தேயுவின் கூறு | 3. | நீர், உதிரம், சுக்கிலம், மூளை, மஜ்ஜை |
| (d) | வாயுவின் கூறு | 4. | மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

147. கீழ்கண்டவற்றுள் பொருந்தாத இணை எது?

(A) ஈசானமுகம் – உச்சாடனம்
(B) தத்புருடம் – மாரணம்
(C) அரகோரம் – ஸ்தம்பனம்
(D) வாமம் – பேதனம்

148. கீழ்கண்டவற்றுள் பொருந்தாத இணை எது?

(A) தேவர் – பத்தொன்பது இலட்சம் பேதம்
(B) மனிதர் – ஒன்பது இலட்சம் பேதம்
(C) விலங்கு – பத்து இலட்சம் பேதம்
(D) பறவை – பத்து இலட்சம் பேதம்

149. சமண கோட்பாட்டின்படி முத்தன் என்றால்

(A) அருகக் கடவுள்
(B) ஆசாபாசத்தை நீக்கியவன்
(C) ஆசையால் கட்டுண்டவன்
(D) மூடன்

150. விலங்குகளின் பிறப்பில் உள்ள பேதங்கள் எத்தனை?

(A) ஐந்து இலட்சம்
(B) பதினைந்து இலட்சம்
(C) பத்து இலட்சம்
(D) இருபது இலட்சம்

151. சைவ சிந்தாந்த சாத்திரம் திருவுந்தியார் ஆசிரியர் யார்?

(A) திருவியலூர் உய்ய வந்த தேவர்

(B) திருநாவுக்கரசர்

(C) சிவ பிரகாசம்

(D) நாயன்மார்கள்

152. பின்வருவனவற்றுள் சிவஞான போதம் எத்தனையாவது சூத்திரம்

(A) ஏழாவது சூத்திரம்

(B) ஐந்தாவது சூத்திரம்

(C) ஒன்பதாஞ் சூத்திரம்

(D) மூன்றாவது சூத்திரம்

153. திருக்கோயிலில் வைத்து வழிபடப்படும் திருவுருவங்கள்

(A) தியானம், பூசை

(B) போக வடிவம், யோக வடிவம், கோர வடிவம்

(C) சக்தியோடு இயைந்துயிருத்தல்

(D) அருள் நினைவினாலேயிருத்தல்

154. சிவதீக்கை என்பது

(A) சைவ ஒழுக்கம் கொண்டு திருமுறைகளை ஓதுவது

(B) இறைவனுடன் ஒன்றரக்கலத்தல்

(C) ஜீவன் முக்தி

(D) சிவ புண்ணியம்

155. ஆணவமலம் என்பது

(A) உயிர்களின் ஆற்றலை வெளிக்கொண்டுவருவது

(B) உயிர் உடம்போடு ஒட்டியிருக்கின்ற நிலை

(C) உயிர்களின் ஆற்றலை இல்லை எனும் படி மறைத்து நிற்பது

(D) நம் உடம்பில் நிகழும் செயல்

156. தமிழரின் வழிபாட்டு முறையில் "வெறியாட்டு" என்பது

(A) நடுகல் வழிபாடு

(B) மனிதர் மேல் தெய்வம் ஏறி வருவது

(C) பலியிடுவது

(D) தெய்வ வழிபாடு

157. மெய்கண்டார், அருள் நந்தி, மறைஞான சம்பந்தர், உமாபதி தேவர் ஆகியோர் பொதுவாக எவ்வாறு குறிக்கப் பெறுகின்றனர்?

(A) அகச் சந்தானாச்சாரியார்கள்

(B) புறச் சந்தானாச்சாரியார்கள்

(C) சமயக் குரவர்கள்

(D) மாமுனிகள்

158. திருக்கையிலையில் இருக்கும் முனிவர்கள் சைவ சமயத்தாரால் எவ்வாறு அழைக்கப் பெறுகின்றனர்?

(A) அகச் சந்தானாச்சாரியார்கள்

(B) புறச் சந்தானாச்சாரியார்கள்

(C) சமயக் குரவர்கள்

(D) தேவர்கள்

159. தென்னாடுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !

என கூறியவர்

(A) திருதக்கத்தேவர்

(B) திருவாதவூரர் மகிழ்செழுமறை முனிவர்

(C) நம்பியாண்டார் நம்பி

(D) மெய்கண்ட தேவன்

160. சைவத்தில் ஆன்மாவின் மூன்று நிலைகள் எவை?

(A) பதி, பசு, பரசம்

(B) கன்மம், மாயை, ஆணவம்

(C) பதி, பசு, மாயை

(D) பதி, பாசம், ஆணவம்

161. அடியவர்களையும் அவர்கள் பின்பற்றிய மார்க்கங்களையும் சரியான முறையில் பொருத்து

(a) திருஞான சம்பந்தர் — 1. சத்புத்ர மார்க்கம்

(b) திருநாவுக்கரசர் — 2. சக மார்க்கம்

(c) சுந்தரர் — 3. தாச மார்க்கம்

(d) மாணிக்கவாசகர் — 4. சற்குரு மார்க்கம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

162. கீழ்கண்டவற்றுள் எந்த இனை தவறானது?

(A) இருபா இருபது – அருள்நந்தி சிவாச்சாரியார்

(B) சிவபிரகாசம் – உமாபதி சிவாச்சாரியார்

(C) உண்மை விளக்கம் – அருள்நந்தி சிவாச்சாரியார்

(D) திருவருள் பயன் – உமாபதி சிவாச்சாரியார்

163. சித்தாந்த சாத்திரங்களில் புறச்சந்தானக் குரவர்கள் என்று அழைக்கப்படுபவர்கள்?

(A) மெய்கண்டார் அருள்நந்தி சிவாச்சாரியார் மறைஞான சம்பந்தர் உமாபதி சிவாச்சாரியார்

(B) நந்திதேவர் சனற்குமாரர் சத்திய ஞானதரிசினி பரஞ்சோதி

(C) மாணிக்கவாசகர் நாவுக்கரசர் சுந்தரர் திருஞான சம்பந்தர்

(D) உமாபதிசிவம் அருள்நந்திசிவம் மெய்கண்டதேவர் தாயுமானவர்

164. சைவ சித்தாந்தக் கருத்துக்களை முழுமையாக விளக்கும் முதல் நூலாகப் பலரால் அறியப்படுவது எது?

(A) சிவஞானபோதம்

(B) திருக்குறள்

(C) தொல்காப்பியம்

(D) புறநானூறு

165. சைவ சமயம் கூறும் இறைவனின் இருநிலைகள் யாவை?

(A) சொரூப – தடத்த நிலைகள்

(B) சித்த – சத்திய நிலைகள்

(C) தற்சார்பு – பிறர் சார்பு நிலைகள்

(D) உண்மை – இன்ப நிலைகள்

166. அம்மையப்பரின் ஒற்றைவடிவத்தின் மறுபெயர் என்ன?

(A) திருவுருகொள்வர்

(B) ஜீவாத்மா

(C) அர்த்த நாரீஸ்வரர்

(D) திருமால்

167. சிவபெருமானின் ரூபாரூப வெளிப்பாடு

(A) சிவம்

(B) சதாசிவம்

(C) மகேசுவரன்

(D) நாதம்

168. சிவனைப் பாடிய "பரணி" எது?

(A) கலிங்கப் பரணி

(B) தக்கயாகப் பரணி

(C) மேற்கூறிய இரண்டும் சரி

(D) மேற்கூறிய மூன்றும் தவறு

169. பரபக்கம் என்பது எத்தனை விருத்தப் பாடல்களைக் கொண்டது?

(A) 100

(B) 301

(C) 200

(D) 300

170. "சுபக்கம்" என்பதன் பொருள்

(A) வேறு மதத்தின் உண்மை கொள்கை

(B) தன் மதத்தின் உண்மை கொள்கை

(C) வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை

(D) உபநிடத கருத்துக்கள்

171. திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் யார்?

(A) திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்

(B) திருவியலூர் உய்ய வந்த தேவநாயனார்

(C) மெய்கண்ட தேவநாயனார்

(D) அருள்நந்தி சிவாச்சாரியார்

172. சைவசித்தாந்த பிரமாண நூல்கள்

(A) சிவஞான போதம்

(B) சிவஞான சித்தியார்

(C) வேதங்கள், ஆகமங்கள்

(D) ஆகமங்கள், உபநிடதங்கள்

173. "பிரஸ்கஸ்பதி" என்ற சொல் யாரை குறிக்கின்றது?

(A) பெருமாள்

(B) சனிபகவான்

(C) குருபகவான்

(D) வருணன்

174. சங்கரர் நிறுவிய மதங்களுள் சூரியனை வழிபடுவது

(A) சாத்தம்

(B) சௌரம்

(C) கௌமாரம்

(D) காணாபத்தியம்

175. கீழே கொடுக்கப்பட்டுள்ளதை பொருத்தி சரியான விடையை தேர்வு செய்யவும் :

| | | | |
|---|---|---|---|
| (a) | மதுரகவியாழ்வார் | 1. | முதல் திருவந்தாதி |
| (b) | நம்மாழ்வார் | 2. | நான்காம் திருவந்தாதி |
| (c) | திருமழிசையாழ்வார் | 3. | திருவாய்மொழி |
| (d) | பொய்கையாழ்வார் | 4. | கண்ணா நுண் சிறுதாம்பு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

176. பட்டியல் I ல் உள்ள ஆழ்வார்களுடன் பட்டியல் II ல் உள்ள பிரபந்தங்களுடன் பொருத்துக :

| | பட்டியல் I<br>ஆழ்வார்கள் | | பட்டியல் II<br>பிரபந்தங்கள் |
|---|---|---|---|
| (a) | ஆண்டாள் | 1. | அமலனாதிபிரான் |
| (b) | திருமங்கையாழ்வார் | 2. | திருப்பள்ளி எழுச்சி |
| (c) | தொண்டரடிப் பொடியாழ்வார் | 3. | பெரிய திருமடல் |
| (d) | திருப்பாணாழ்வார் | 4. | நாச்சியார் திருமொழி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

177. ஆண்டாள் பாடிய திவ்விய பிரபந்தம்

(A) திருமடல்

(B) திருப்பாவை

(C) திருமாலை

(D) திருப்பல்லாண்டு

178. எல்லா மதங்களுக்கும் தாயக மதம் எனக் கருதப்படும் மதம்

(A) சமண மதம்

(B) கிருத்துவ மதம்

(C) இஸ்லாம் மதம்

(D) இந்து மதம்

179. நல்லடிக்காலம் என்பது

(A) மாணிக்கவாசகர் அவதரித்த காலம்

(B) நம்மாழ்வார் அவதாரம் செய்த காலம்

(C) உமறுப்புலவர் உதித்த காலம்

(D) திருவள்ளுவர் காலம்

180. உபநிடதங்கள் பிரம்மத்தை இரு நிலைகளில் கூறும் போது ஒன்று நிஷ்பிரபஞ்சம் என்கிறது, மற்றொரு நிலையின் பெயர் யாது?

(A) சகுண பிரம்மம்

(B) நிர்குண பிரம்மம்

(C) ச-பிரபஞ்சம்

(D) பிரம்ம பரிணாமம்

181. பொருத்துக :

| | ஆழ்வார் | | பிறப்பிடம் |
|---|---|---|---|
| (a) | பொய்கையாழ்வார் | 1. | ஆழ்வார் திருநகர் |
| (b) | பூதத்தாழ்வார் | 2. | காஞ்சிபுரம் |
| (c) | பேயாழ்வார் | 3. | மகாபலிபுரம் |
| (d) | நம்மாழ்வார் | 4. | மைலாப்பூர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

182. சங்கு, சக்கரம் ஆகியவற்றை அடையாளங்களாகக் கொண்ட மதம்

(A) சைவம்
(B) வைணவம்
(C) சாக்தம்
(D) சௌரம்

183. வடகலைப் பிரிவிற்கும், தென்கலைப் பிரிவிற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளில் ஒன்றாகக் கருதப்படுவது இதன் பொருளை அடிப்படையாகக் கொண்டது

(A) பிரபத்தி
(B) தத்துவத்திரயம்
(C) திரிவிரித் கரணம்
(D) பிரம்மபரிணாமவாதம்

184. வைணவ சமயத்தின் தென்கலைப் பிரிவை வலியுறுத்தியவர்

(A) மணவாள மாமுனிகள்
(B) வேதாந்த தேசிகர்
(C) சங்கரர்
(D) மெய்கண்டார்

185. வைணவ சமயத்தில் பக்தியோகம் இவ்வாறு அழைக்கப்பெறும்

(A) சிற்சக்தி
(B) மலப்பரிபாகம்
(C) கைவல்யம்
(D) பரபக்தி

186. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் ஆழ்வார்களால் இவ்வாறு அழைக்கப்பெறும்

(A) வேதம்
(B) திராவிட வேதம்
(C) ஆரிய வேதம்
(D) புருஷ சூக்தம்

187. வேதாந்த சூத்திரத்திற்கு இராமானுஜர் எழுதிய விளக்க உரையின் பெயர் யாது?

(A) யோக சூத்திரம்
(B) வைசேஷிக சூத்திரம்
(C) ஸ்ரீபாஷ்யம்
(D) பிரம்ம சூத்திரம்

188. "நாடினேன் நாடிநான் கண்டுகொண்டேன்

நாராயணா என்னும் நாமம்"

இப்பாடலை பாடியவர்

(A) நம்மாழ்வார்

(B) ஆண்டாள்

(C) பொய்கையாழ்வார்

(D) திருமங்கை ஆழ்வார்

189. 'பாஞ்சராத்ர ஆகமம்' தொடர்புடைய சமயம்

(A) சைவம்
(B) வைணவம்
(C) கௌமாரம்
(D) காணாபத்யம்

190. 'திருவாய்மொழியின்' ஆசிரியர் —————— ஆவர்.

(A) நம்மாழ்வார்
(B) ஆண்டாள்
(C) பேயாழ்வார்
(D) பூதத்தாழ்வார்

191. "தென் திருப்பதி" என அழைக்கப்படும் ஊர்

(A) காஞ்சிபுரம்
(B) தஞ்சாவூர்
(C) திருவரங்கம்
(D) மதுரை

192. சங்க கால நூல்களில் "பிறவாயாக்கைப் பெரியோன்" "சடையன்" என்ற பெயர் யாரைக் குறிக்கின்றன?

(A) சிவன்
(B) இந்திரன்
(C) சக்தி
(D) முருகன்

193. கண்ணனாலும் மதிக்க பெற்ற ஞானம் உடையவர்

(A) பீஷ்மர்
(B) நாரதர்
(C) முருகன்
(D) விநாயகர்

194. கடவுள் நெறிக்கு இல்லறம் தடையன்று என்று கூறிய சமயம்

(A) சமணம் (B) சாத்தம்

(C) சைவம் (D) காணபத்தியம்

195. மக்கள் அனைவரும் உய்யும் வகையில் இராமானுஜர், திருக்கோஷ்டியூர் கோயில் கோபுரத்தில் ஏறி உபதேசித்த மந்திரம்

(A) சஷ்டார்த்த மகாமந்திரம்

(B) அருட்பெருங்சோதி மகாமந்திரம்

(C) பஞ்சாட்சர மகாமந்திரம்

(D) அஷ்டாட்சர மகாமந்திரம்

196. 'சரணாகதித் தத்துவம்' ஏற்கும் சமயம்

(A) கானபத்தியம் (B) சாக்தம்

(C) வைணவம் (D) சைவம்

197. மாத்துவாச்சாரியாருக்கு ———————— இவ்வாறான பெயர்களும் உண்டு.

(A) ஞாயிறுறுடையோன் (B) செவ்வேள்வி கண்டார்

(C) வேதாகமர், புராணம்கண்டார் (D) ஆனந்த தீர்த்தர், பூரண பிரச்சினர்

198. வைணவ மட தலைவர்களை ———————— இவ்வாறு அழைப்பர்.

(A) அடிகள் (B) தம்பிரான்

(C) ஐயர் (D) ஜீயர்

199. வேதாந்த தேசிகர் எழுதிய நூல்களுள் ஒன்று

(A) யோகரத்தினம் (B) திருப்பாவை

(C) ரகசிய திரியசாரம் (D) திருவெம்பாவை

200. இராமானுஜரின் வேதாந்தத்தின்படி பிரம்மம் 'விசேஷியம்' என்றால், உடலும் உயிர்களும்

(A) கன்மங்கள் (B) ஆனவங்கள்

(C) விசேஷணங்கள் (D) மாயைகள்

---

SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK

SPACE FOR ROUGH WORK

SEAL